## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தேசிய சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தய-ாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(உ) இன் பிரகாரம் நிறுவனமொன்று அங்கீகரித்த பாதீடொன்று விநியோகிக்கப்பட்டிருக்குமாயின் மேலதிக நிதிக்கூற்றொன்றாக பாதீடு செய்யப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே ஒப்பீட்டுரீதியாக அல்லது | பாதீட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொகைகளை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தொகைகள் தனியான நிரலாக சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று இல்லாத ரூபா 29,268,683 பெறுமதியுடைய 08 விடயங்கள் பாதீடு செய்யப்பட்ட தகவல்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாற்றுக் கணக்கு வைத்தல் முறைமையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஆண்டில் கிடைக்கப் பெற்ற சகல மூலதன மானியங்கள் மற்றும் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் உருவான வருமானத்தின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மூலதன மானியமாகக் கிடைத்த ரூபா 3,038,000 தொகையில் ரூபா 1,256,094 தொகை வருமானமாக இனங்காணப்படாமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 1,256,094 இனால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின்போது சரியாக மூலதன மானியங்கள் கணக்கீடு செய்யப்படுமென இணங்குகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க அரசாங்கத்தின் மானியங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்களுக்காக இனங்காணப்படவேண்டிய பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 2,052,637 ஆக இருந்தபோதும் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு செலவினமாக ரூபா 1,843,867 காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மோட்டார் வாகனக் கணக்கின் மீதி ரூபா 208,770 இனால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மோட்டார் வாகனக் கணக்கு 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு இணங்குகின்றோம். | பெறுமானத் தேய்வு செலவினங்களை சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கணனி துணை பாகங்களுக்காக மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து மீள்மதிப்பீட்டுத் திகதி வரை இனங்காணப்படவேண்டிய பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 98,019 ஆக இருந்த | கணனி துணைப்பாகங்கள் கணக்கு 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு | பெறுமானத் தேய்வு செலவினங்கள் சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 167,581 ஆக இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 69,562 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றோம். | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா 541,933 செலவினம் மிகை ஒதுக்கீடாக ஆண்டின் மிகையில் சீராக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசு பாய்ச்சல் கூற்றை சரிசெய்வதற்கு இணங்குகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் உள்ளபடியான பெறுமதி மாத்திரம் காண்பிப்பதை கண்காணித்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக இருப்புக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 1,080,690,696 தொகை, காகிதாதிகள் செலவினக் கணக்கில் தாமத வழுக்களினால் ரூபா 180,696 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் இறுதி இருப்பின் பெறுமதி என்பன ரூபா 900,000 இனால் முறையே குறைத்தும், அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | காகிதாதிகள் கணக்கை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளின் சரியான தன்மை உறுதிபடுத்தப்படல் வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட மிகைக் கணக்கு மற்றும் பிற்போட்ட அரசாங்கத்தின் மூலதன மானியக் கணக்கின் மீதி முறையே ரூபா 267,254 மற்றும் ரூபா 9,297,497 ஆக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியாக திரண்ட மிகைக் கணக்கில் ரூபா 508,294 வரவிலும், பிற்போட்ட அரசாங்கத்தின் மூலதன மானியக் கணக்கில் ரூபா 10,073,045 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது. | திரண்ட மிகைக் கணக்கு மற்றும் பிற்போட்ட அரசாங்க மூலதன மானியக்கணக்கு 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்யுமாறு ஆலேசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதி மீதி, அடுத்து வரும் ஆண்டின் ஆரம்ப மீதியாக பிரதி செய்யும் போது பிழையாகப் பதியப்படுவதை சரியாகப் பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டின் போது மீள்மதீப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 831,123 நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு செலவினமாக இனங்காணப்பட்டிருக்கும் போது வழுக்களுடன் மீண்டும் அப்பெறுமதி ஆண்டின் வருமானத்திலும் மற்றும் பிற்போட்ட வருமானக் கணக்கிலும் பதியப்பட்தன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பிற்போட்ட வருமான மானியம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிந்தது. | மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு சரியாக சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுமானத் தேய்வை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கடந்த ஆண்டுகளின் போது பொருள் மெய்மையாய்வுகளின் போது காணப்பட்டு அகற்றப்பட்ட கிரயம் ரூபா 569,973 ஆன கணனி துணைப்பாகங்கள் மீளாய்வாண்டின் போது புத்தகங்களில் பதிவழிக்கும் போது சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வு சொத்துக்கள் பதிவழிக்கும் கணக்கிற்கு மாற்றப்படாமல் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் மீதி என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சான்றுகளை கண்டறிந்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை புத்தகங்களில் பதிவழிக்கும் போது சொத்துக்களின் திரண்ட பெறுமானத் தேய்வு சொத்துக்கள் பதிவழிக்கும் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| கணனி உபகரணங்கள் கணக்கின் மீதி | 5,698,339 | 5,380,568 | 317,771 | கணனி மீள்மதிப்பிட்டுக் கணக்கு 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு இணங்குகின்றோம். | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான தன்மை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2023 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2023/01 என்ற தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 02(viii) பந்தியின் மூலம் திருத்தப்பட்ட 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 2022/03 என்ற தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றிக்கையின் 3(x) | அரசாங்கத்தின் முற்பணக்கணக்கின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தருக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் கைவிடப்பட்ட போது அதற்கு இணங்காத வகையில் சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த 03 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும், 07 பேர்களுக்கும் | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு இணங்க நடவக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆம் பந்தி | முறையே இடர்கடனாக ரூபா 403,000 தொகையும், விழா முற்பனமாக ரூபா 70,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 550,915 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,193,977 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,744,892 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் மானியம் ரூபா 1,787,755 இனால் அதிகரித்திருந்த போதிலும் அதனுடன் ஒப்பிடும் போது மொத்த செலவினம் ரூபா 4,063,630 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் இருந்து சபையினால் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தியதால் உருவான ரூபா 14,329,816 மிகை ஆக்கபூர்வமானதாக முதலீடு செய்யப்படாமல் 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் பெயரில் அரசாங்கத்தின் வங்கியின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ஆகக் குறைந்தது ரூபா 788,140 வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிர்வாக சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தற்போது நிலையான வைப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டுள்ளது. | வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற மிகைப் பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் கொள்கை ஒன்றைத் தயாரித்தல் மற்றும் அதனைக் காலரீதியில் மீளாய்வு செய்து, மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக அமைச்சருக்கும் மற்றும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை வழங்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருட காலம் கடந்திருந்த போதும் தேசிய சபை தாபிக்கப்பட்டதன் மேற்கூறப்பட்ட அடிப்படையில் நோக்கத்தை அடைந்து | திருத்தங்களைத் தயாரித்து மனித வள அபிவிருத்திக் கொள்கைக்காக 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தற்போதைய தேவைகளுக்கு இணங்கும் வகையில் இந்த கொள்கையைத் திருத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமான வழிகளை எடுத்து நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. | | |
| (ஆ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 16(2)இ மற்றும் 16(2)ஊ பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல். | | |
| (i) | சபையினால் நிறைவேற்றப்படுகின்ற இலக்குகளுக்கு சமமான பணிகளை நிறைவேற்றுகின்ற இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள சர்வதேச முகராண்மை நிறுவனம் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த பணிகள் நிறைவேற்றப் படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தை பரீட்சித்த போது இதற்காக தேவையான செயற்பாடுகளேனும் திட்டமிப்பட்டிருக்கவில்லை. | 2023.08.02 ஆம் திகதிய மனித வள அபிவிருத்தி திட்டம் டாக்காவில் அமைந்துள்ள BIMSTEC நிரந்தர செயலாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தமையும் தற்போது அந்த திட்டத்தின் கருத்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுக்காக அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அடிப்படையாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ii) | நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு துறைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கியொன்றை பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் அண்டின் போது தரவு வங்கியை நிர்மாணிப்பதற்காக ஆலோசனையாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவித்திருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தரவு வங்கியொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இதன் போது சேகரிக்கப்படுகின்ற தரவுகளுக்கிடையே அறிக்கையொன்று பெறுகைசெய்து பிரதமர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது கட்டமாக டிஜிட்டல் தரவு முறைமையொன்றை வழங்குவதற்காக முன்மொழியப்பட்ட போதிலும் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற கஷ்டத்தின் காரணமாக அந்த விடயங்களை அமுல்படுத்துதல் தடைப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் தரவு வங்கியை பேணிச் செல்வது தொடர்பில் முதலாவதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2016 பெப்ரவரி மாதம் முதல் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டங்களை அமுல்படுத்தும் அமைச்சிற்கு சொந்தமான மதிப்பீடுப் | வாகனத்தின் உரிமைத் தன்மை சபைக்கு கையளிக்குமாறு பல தடவைகள் கோரப்பட்ட போதிலும் அதற்கான தெளிவான பதிலொன்று வழங்கப்படவில்லை. | வாகனத்தின் உரிமைத் தன்மையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பெறுமதி ரூபா 9,100,000 ஆன கெப் வண்டி 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக உரிய அமைச்சின் உத்தியோகத்தருடன் கலந்துரையா டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் PFD/08/2019 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல பொது முயற்சிகள் 2020 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய e-GP முறைமைக்காக பதிவு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் தேசிய சபையினால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் e-GP முறைமையில் விரைவாக பதிவு செய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சியின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்குரிய சபையின் நிதிக் கூற்றுக்கள் 132 நாட்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2023 யூன் 12 ஆம் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த கூட்டம் 2023.03.30 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் உரிய நிர்வாக சபையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |